# கிருபையுள்ள வார்த்தை
## KIRUBAIYULLA VAARTHAI

Vol - 16 | August ஆகஸ்ட் | 2015

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




# உயிர்த்தெழுதல் சொல்லும் உண்மை செய்திகள்


கௌரவ ஆசிரியர் Betty Choate    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


எது கிறிஸ்துவை சிலுவையில்... 3

இயேசு கிறிஸ்துவின் ... 5

இது என்ன ஆச்சரியம்.... 8

இயேசுவே உயிர்த்தெழுதலும் 13

சிறுவர் பகுதி 15


*In memory of* **J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

**V. கிங்ஸ்லிராஜா.** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா.** D.Th.,

சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**"உயிர்த்தெழுதலின் உண்மையை சொல்லும் உன்னத வார்த்தை"**

**கிருபையுள்ள வார்த்தை**

# TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு** காலை 6.45 மணி

**வெள்ளி** காலை 6.00 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !

செய்தியாளர்கள்:


போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை – 6.15 மணிக்கு கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.83

## உங்கள் முகவரிகளை சரிபார்க்க உதவுங்கள்!

வாசகர்களே ! இப்பத்திரிக்கை கிடைத்தவுடன், உங்கள் சரியான முகவரியை "OK!" என்ற குறியீட்டுடன், எங்களுக்கு SMS அல்லது தபால் அட்டை (Post Card) அனுப்பி வையுங்கள் ! தங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிக்கை திரும்பி (Return) வருவதை தடுக்கவும், முகவரியில் திருத்தம் செய்யவும் எங்களுக்கு இது உதவும். நன்றி!



**Cell : 92 4421 4421, 92 4431 4431**

### ஆசிரியர் உரை

# கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது எது?



P.C.பிலோமோன் ராஜா
ஆசிரியர்
கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே! ஆண்டவரின் பெயராலே உங்கள் அனைவரையும் வாழ்த்தி, இம்மாத இதழ் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 1. யார் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது? என்ற கேள்வி,

அறிவு சார் மக்களுக்கானது. அவரை அறைந்தவர்கள் மரித்துப் போய் விட்டார்கள்.

எது கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது? என்ற கேள்வி தான்

மிகவும் பொருத்தமான கேள்வி. காரணமாகிய ஏனெனில், இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைய நோக்கமாகிய பாவங்கள் என்றும், பிரச்சனை இன்றும் உயிருள்ளதாய் இருக்கிறது.

நாம் செய்யும் பாவங்களினால், இன்றும் கிறிஸ்துவாகிய தேவகுமாரனை சிலுவையில் அறைவதற்கு சாத்தியமுள்ளது (எபி 6 : 6).

*இயேசுவின் எதிரிகள் அவரை சிலுவையில் அறைந்தனர்; ஆனால் எப்படிப்பட்ட குணங்கள் (அல்லது) எது அவர்களை அப்படி செய்ய வைத்தது.*




**பொறாமை :** இது, மாம்சத்தின் செயல் ஆகும் (கலா 5 : 19 - 21).

பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிவான் (மத் 27 : 17).

பொறாமை என்பது அதிருப்த்தியினால் உண்டாகும் உணர்வு ஆகும்.

அன்புக்கு பொறாமையில்லை (1 கொரி 13: 4)

பொறாமைப்படும் நபர் பாவம் செய்கிறார்.

யோசேப்பின் உடன் பிறந்தவர்கள் இதற்கு சரியான உதாரணம் (ஆதி 37). சவுல் ராஜா (1 சாமு 16), மூத்த குமாரன் (லூக் 15) இன்னும் நிறைய நபர்களையும் உதாரணமாகச் சொல்லலாம்.

**பேராசை:** இயேசுவை சிலுவையில் அறைந்ததற்கு பேராசையும் காரணம்.

பேராசை கொண்ட (Greed) யூதாஸ், யூத மததலைவர்களின் கூட்டுச்சதியில் சேர்ந்து, ஆண்டவர் இயேசுவை விற்றுப்போட்டான் (மத் 26 : 14 - 16).

பணத்திற்காக எதையும் செய்வோர் எப்பொழுதுமே இவ்வுலகில் இருப்பது ஆச்சரியமானதல்ல.




இப்படி தனக்கு பணம் வந்தால் போதும், என் விருப்பம் நிறைவேறினால் போதும், எனக்கு பணம் வரும் வழி யாரையும் அழித்துவிடக் கூடாது என்று சிறிது அளவு கூட கவலைபடாதோர் ஆகிய பலர் இன்றும் வாழ்கின்றனர்.

(உ.ம்) பிராந்தி, சாராய வியாபாரிகள், போதைமருந்துகொடுத்துதீமைசெய்வோர், பரத்தையர் (விபசாரம் செய்வோர்) பற்றிய படங்கள், பாடங்கள் விற்போர். மனிதர்கள் மறைவிடத்தில் செய்யும் உறவுகளை பிரபலயப்படுத்துவோர், பொய்கூறுவோர், திருடுவோர், ஏமாற்றுகிறோம் என்று தெரிந்தும் அதை செய்வோர் எல்லாரும் பேராசை கொள்வோர் தான்

1 தீமோ 6 : 10 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்'.

**அறியாமை:**

**அறியாமை கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது :**



**பேதுரு கூறினார்** 'சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்' (அப் 3 : 17).

1 கொரி 2 : 8 'அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே'.

அறியாமையை ஒரு சாக்குபோக்காக கருத முடியாது.

அப்17:30'அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

**கோழைத்தனம்: இயேசுவை சிலுவையில் அறைந்தது :**

1. மத் 26 : 56 "சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.'' இவர்கள் மறுதலித்து ஓடிப்போனார்கள்.

2. மத் 26 : 58 பேதுரு இயேசுவை தூரத்திலே பின் தொடர்ந்தான்.

3. பிலாத்து : மக்களின் தயவு வேண்டும் என்பதால், கைகழுவி இயேசுவை சிலுவைக்கு அறைய அனுப்பினான் (மத் 27: 15 - 26).

ஜெப ஆலயத்தலைவர்கள் சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தனர். ஆனாலும் அறிக்கையிடவில்லை (யோவா 12 : 42, 43).

இப்படிப்பட்ட கோழைத்தனம், தைரியம் குறைவு, முடிவு எடுக்க முடியாமை ஆகியவையே கிறிஸ்துவை சிலுவையில் அடிக்க வைத்தது.

இதை வாசிக்கிற நாம் மேற்சொன்ன பாவங்களை நமது வாழ்விலிருந்து நீக்கி, சுத்தம் செய்வோம்.

பொறாமை, பேராசை, அறியாமை, கோழைத்தனம் போன்றவைகள் நம் இருதயத்தில் இருக்கின்றதா? இருந்தால் நாம் மீண்டும் அவரை சிலுவையில் அடிக்கிறோம்.

நிச்சயமாக, தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையில் அடிப்பதைவிட, இந்த தரமற்ற குணங்களை நம்மை விட்டு கழித்துவிடுவோம்.

தேவன் நம்மை அவர் வசனத்தில் வழிநடத்தி, ஆசீர்வதிப்பாராக!

# இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல்
# The Ressurection of Jesus Christ

Betty Burton Choate



வேத வசனங்களை நன்றாக அறிந்தவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் காலமானது மனிதனின் படைப்பிற்கு முன்னமே உள்ளது என தெரியும். வெளி 13 : 8ல் அவரைப் பற்றி சொல்லும்போது "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி ....." என்கிறது. மேலும் யோ 1 : 1 அவரை, "வார்த்தை" என்று அடையாளம் காண்கிறது ; மேலும் அவர் மூலமாய், அவராலே, அவருக்கென்று எல்லாம் படைக்கப்பட்டது என்று கூறுகிறது. சாத்தானை அழிக்கக் கூடிய ஸ்திரீயின் "வித்தாக" அவர் இருப்பார் என்ற வாக்குத்தத்தத்தை ஆதியாகமம் 3 : 15 கொண்டுள்ளது.

### அவர் வருகையைப் பற்றிய வாக்குத்தத்தம்:

அவருடைய வருகையைப் பற்றிய நூற்றக்கனக்கான தீர்க்கதரிசனங்கள் மற்றும் வாக்குத்தத்தங்களால் பழைய ஏற்பாட்டு வசனங்கள் நிறைந்துள்ளன ; மேலும் தேவன் நமக்கு வசனத்தினால் வெளிப்படுத்தியதால் மட்டுமே நாம் அறிந்துகொள்ள முடிந்த அநேக விபரங்களையும் நாம் காண்கிறோம். ஆதியாகமத்தின் எழுத்தாளருக்கு, இரட்சகர் ஆபிரகாமின் சந்ததியில் வருவார் என்பது எவ்வாறு தெரியும் (ஆதி 22 : 17, 18). மேசியாவின் வம்சவரலாறு பற்றிய விபரங்களை, அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், அது ஈசாக்கு (ஆதி 21 : 12), பின்பு யாக்கோபு (எண் 24 : 17) பின்பு யூதா (ஆதி 49 : 10), பின்பு தாவீதி (எரேமியா 23 : 5) ஆகிய சந்ததிகளின் மூலம் இருக்கும் என்ற குறிப்பிட்ட பெயர்களை தேவனேயல்லாமல் வேறு யார் கொடுக்க முடியும்?

### அவருடைய பிறப்பு:

இயேசு கிறிஸ்து, எப்பிராத்தா என்ற பெத்லகேமில் (மீகா 5 : 2), ஒரு கன்னிக்கு பிறப்பார் (மத் 1 : 23) என்றும், பின்பு எகிப்தில் இருந்து நாசரேத்திற்கு (மத் 2 : 15, 23) கொண்டு வரப்படுவார் என்றும் தேவனேயன்றி வேறு யார் கூற முடியும்?

### அவர் அதிகாரமுடையவராகம் போதித்தார்:

சுவிசேஷ புத்தகங்களை நாம் படிக்கும்போது, நம்முடைய விசுவாசத்தை வளர்க்கும் சத்தியமானது அவருடைய போதனைகளால் ஆனது. "மலைப்பிரசங்கம்" தொடங்கி அவருடைய உவமைகள் வரையும், மேலும் அவருடைய தீர்க்கதரிசனங்கள் மற்றும் உபதேச வாக்கியங்களாக இருந்தாலும் சரி, அவைகளால் இவ்வுலகிற்கு ஒரு புரட்சிகரமான புதிய வழியானது அறிமுகப்படுத்தப்பட்டு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டப்பட்டது. அவருக்கு முன் இருந்து காலங்களில், 'வாங்குவதைவிட கொடுப்பது சிறந்தது', 'எதிரிகளை நேசிக்க வேண்டும்', 'இரண்டு மைல்' நல்லது, இருதயத்தில் உள்ள பாவம், செய்ததற்கே சமம்' போன்ற போதனைகளை வேறு


யார் அதற்கு முன் போதித்திருந்தது? யாரெல்லாம் கடவுளையும், அவருடைய ராஜ்யத்தையும் முதன்மையாக தேடுவார்களோ, அவர்கட்கு உலகில் உள்ள மாம்ச தேவைகள் கொடுக்கப்படும் என்று வேறு யார் அவரைப்போல வாக்கு கொடுத்திருந்தனர். அவரை வெறுத்த மதத்தலைவர்களும்கூட, அவருடைய ஆவிக்குரிய அதிகாரமுள்ள பேச்சைக் கேட்டு வியக்கும் விதமாக அவருடைய காலத்திற்கு முன் வேறு யார் பேசியது (மாற்கு 1 : 27) ?

### அவருடைய அற்புதங்கள்

அவர் தான் தேவனிடத்தில் இருந்து வந்ததைக் குறிக்கும் வண்ணமாக பேசிய, வல்லமையான பாடங்களை உறுதிப்படுத்த செய்த அற்புதங்களைப்பற்றியும் நாம் வாசிக்கின்றோம். அவர் வாய்மொழியாக கொடுத்த வழிகாட்டுதல்களும், கடவுளிடம் இருந்து வந்த ஒருவரால் மட்டுமே செய்யக் கூடிய அற்புதங்களும், நம்முடைய கிறிஸ்துவுக்குள்ளான வாழ்விற்கான அடித்தளமாயின.

### அவருடைய மரணம்:

கிறிஸ்துவுடன் நம்மை எது இணைத்துள்ளது? எல்லாரும் அறிந்த வண்ணமாக, அவருடைய சிலுவை மரணத்தின் மூலமே, அவர் நம்முடைய பாவங்களை தன்னுடைய பாவங்களாக எடுத்துக்கொண்டார் ; மேலும் அந்த அவருடைய மரணத்தை நம்முடைய பாவ மரணத்தின் மூலம் இணைத்து, ஞானஸ்நான தண்ணீரிலே அடக்கம் பண்ணிப்படுவதினால், அவருடைய இரத்தத்தினால் கழுவப்படுகிறோம்.



“கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?’’

“மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.’’ என்று ரோமர் 6 : 3,4 கூறுகின்றது. இயேசுவின் சிலுவை மரணமின்றி நம்மில் யாருக்குமே மன்னிப்போ, இரட்சிப்போ கிடையாது.

### அவருடைய உயிர்தெழுதலைப்பற்றி என்ன?

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் முழுமையான கவனம் எதைப்பற்றியது? அது உயிர்தெழுதலே ! இயேசு உயிரோடு எழுந்திராதிருந்தால், அவரைப் பற்றி எழுதப்பட்ட அனைத்துமே கேள்விக்குறியாகும் என வசனங்கள் கூறுவதைப் போல் அவர்களும் உணர்ந்திருந்தனர். ஆம், அவரோடு கூட அவருடைய போதனைகளும் கல்லறைக்கே சென்றிருந்தால் என்ன பயன்? இயேசுவின் காலத்திலேயே இயேசுவைப் போலவே சிலுவையில் அறையப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் உயிர்தெழுந்திருக்காததைப் போல, இவரும் கல்லறையிலேயே இருந்திருந்தால், அவருடைய மரணத்தில் என்ன வித்தியாசம் உண்டு?

"... இயேசு "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா உங்கள் விசுவாசமும் விருதா'' (1 கொரி 15:14) என்று பவுல்

கூறுகிறார். இரட்சிப்பிற்கான அடிப்படைய தேவைகளில் ஒன்று என்னவெனில் நாம் "... தேவன் அவரை (இயேசு) மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' என்பதே !



"...." (மத் 27:63) என்று இயேசுவைக் குறித்து பசிசேயர்கள் பிலாத்துவிடம் கூறினார். ஏனெனில், அவருடைய பிறப்போ, போதனையோ, அவருடைய அற்புதங்களோ, ஏன் மரணமோ கூட, அவர் உலகத்தின் மீது உண்டாக்கும் தாக்கத்தை தீர்மானிக்காது என்று அவர்கள் உணர்ந்திருந்தனர்; மாறாக, அவருடைய உயிர்த்தெழுதலே மக்களை மாற்றும்.

இயேசுவின் கல்லறையிலே காவல் வைத்து, தவறான கூற்றை தடுக்க வேண்டும் என்பதே அவர்களின் இலட்சியம்.

கிறிஸ்தவர்களாக நமக்கு இரண்டு சவால்கள் உண்டு: 1. நம்முடைய சொந்த விசுவாசத்தில் உறுதியாக நிலைநிற்க வேண்டும் மற்றும் 2. (1 பேதுரு 3:15) வசனத்தின் படி எப்பொழுதும் தேவையான ஆதாரப்பூர்வமான அறிவை அடைந்திருக்க வேண்டும்.

**ஆதாரங்கள் :**

சுவிசேஷ புத்தகங்களை கவனமாக ஆராய்ந்தால் இந்த உண்மைகளை அறியலாம்.

1. தாங்கள் தூங்கிவிட்டபொழுது, இயேசுவின் சீடர்கள் அவருடைய உடலை திருடிச் சென்றுவிட்டதாக காவலர்கள் கூறினார். அப்படி உண்மையிலேயே நடந்திருந்தால், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கைதியை காவல் காக்க தவறிய குற்றத்திற்காக, அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

2. இயேசு சிலுவையில் பாடுபட்ட நேரத்தில் அவரை புறக்கணித்த சீடர்கள் அவருடைய உயிர்தெழுதலுக்கு பின் அவர் மரித்தோரிலிருந்து எழுந்து தங்கள் அனைவருக்கும் தரிசனமானார் என்றும் பகிரங்கமாக கூறினார். இந்த சம்பவம் நடந்த சில தினங்களிலே, அவர் அடக்கம் பண்ணப்பட்ட அதே பட்டணத்திலே பகிரங்கமாக அவரைப் பற்றி பறை சாற்றினார்; அந்த கல்லறை காலியாக இருந்திராவிட்டால், அவர்களுடைய பேச்சை யாரும் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள் அல்லவா?

3. கிறிஸ்துவுக்கு எதிரான போராளியாக இருந்த சவுல், உயிர்தெழுந்த ஆண்டவரை கண்டார்; பின்பு மனமாறினார்; பின்பு சாட்சியாக தானே மரிக்கும் அளவு சென்றார்.

4. யாக்கோபு என்னும் இயேசுவின் சகோதரனான அவிசுவாசி, பின்பு அவரின் உயிர்தெழுதலுக்கு பின் ஏற்றுக்கொண்டு, எருசலேமில் இருந்த சபையில் உறுதியாக வழிநடத்தும் பொறுப்பில் இருந்தார்.

5. இயேசுவின் வாழ்வை பற்றியும் அவரின் மரணத்தைப் பற்றியும் அவர் காலத்து வரலாற்றாலர்கள் குறிப்பிட்டிருந்தனர்; அது நாம் நம்முடைய காலண்டர்களில் கி.மு./கி.பி என்று அடையாளப்படுத்தியிருப்பதே இன்னும் ஒரு சாட்சி.

**ஆகையால் நாம், காலியான கல்லறையின் வெற்றியை இந்த உலகத்திற்கு எடுத்துச் செல்ல தயங்க வேண்டாம்!**

–*தமிழில்* **கிங்ஸ்லி ராஜா**

# இது என்ன ஆச்சரியமாக உள்ளதே! உயிர்த்தெழுதல் உண்டா?

Louis Rushmore
(U.S.A)



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் "உயிர்தெழுதல்'' என்ற செய்தியே நற்செய்தியின் (Gospel) மையப்பகுதியாகும்.

மேலும் புதிய ஏற்பாடு முழுவதற்கான "இருதயம்'' போன்ற செய்தி அது தான்.

1கொரி 15:14 'கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா உங்கள் விசுவாசமும் விருதா'.

யாருமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அதிகப்படியாக முக்கியத்துவம் கொடுக்காமல் சாதரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

2 கொரி 4:14 'கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர், எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி உங்களுடனே கூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்'.

ஒவ்வொரு கிறிஸ்தவனின் உயிர்த்தெழுதலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு இணைந்திருக்கிறது.

1 பேதுரு 1:3,4 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து, மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார்; ஆனால் மீண்டும் கல்லறைக்கு செல்லவேயில்லை.

இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்திராவிட்டால் பாவ பாரத்திலிருந்து முழுமையாக மனித சமுதாயம் விடுபட நம்பிக்கையே அற்ற நிலைதான் இருந்திருக்கும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய தெய்வீக குமாரனாக இருந்தாலும், அவரின் மரணம் அடக்கம் உயித்தெழுதல் இல்லாமல், மனுக்குலத்தின் நம்பிக்கையே என்றென்றும் உடைக்கப்பட்டிருக்கும்.

இயேசு கிறிஸ்து ஏற்கனவே, தீர்க்கத்தரிசனமாக நெடுங்காலம் முன்பு முன்னுரைக்கப்பட்ட இரட்சகராகவும், மேசியாவாகவும் இருந்தாலும், அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்திராவிட்டால், அவரால் யாருக்குமே பாவத்திலிருந்து விடுதலை கொடுத்திருக்க முடியாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, என்னதான் சிலுவையில் தன் விலைமதிப்பில்லா இரத்தத்தை சிந்தியிருந்தாலும், அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்திராவிட்டால், அவர் பாவத்திற்கென்று கொடுத்த விலையானது மதிப்பற்றதாக (பலிக்காததாக) மாறி இருக்கும்.

எல்லா தீர்க்கத்தரிசனங்களையும் இயேசு நிறைவேற்றியிருந்தாலும், அவர் உயிர்த்தெழுந்திராமல் போய் இருந்தால் அவை எல்லாமே அர்த்தமற்றதாகி போய் இருந்திருக்கும்.


பழைய ஏற்பாட்டுக் காலத்திலே முற்பிதா காலத்தில், மற்றும் யூதர்களின் காலத்தில், உண்மையாக கீழ்ப்படிந்த மாபெரும்

கூட்டமாகிய ஆத்துமாக்கள், இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் நடக்காதிருந்தால் பரலோக பிதாவினிடமும் நித்தியத்தையும் நெருங்கி சேரவோ முடியாமல் போயிருக்கும்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்திராவிட்டால், ஆம் ! எல்லாமே மாயை ஆகு இருக்கும்.

கிறிஸ்துவின் உயிர்தெழுதல் நடந்திராவிட்டால் சபை என்ற ஒன்று நிறுவப்பட சாத்தியமே இல்லை. லூக்கா 19:10ன் படி, இழந்துபோனதைத் தேடவும் மீட்கவும் வந்த இயேசு கிறிஸ்துவின் தலையாய தெய்வீக பணி, அவர் உயிர்த்தெழுந்திருக்காவிட்டால், இவர் மேசியா மற்றும் தேவனுடைய குமாரன் என்பதை மறுத்திருக்கும்.

மிகவும் எளிமையாக ஒன்று அல்ல இரண்டு வரிகளில் கூறுவதானால், ஆண்டவர் கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்திராவிட்டால், இன்று கிறிஸ்துவமே இல்லை!



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது ஏப்ரல் 9, ஞாயிறு கி.பி. 33 (**A.D.** 33). இயேசு கிறிஸ்து வெள்ளி ஏப்ரல் 7ல் சிலுவையில் அறையப்பட்டார். அந்த நாளில் ஆச்சரியமான அடையாளங்கள் மற்றும் மாபெரும் நிகழ்வுகள் நடைபெற்றது.

1. பூமி அதிர்ச்சி

2. தேவாலய திரைச்சீலை இரணடாக கிழிந்தது.

3. பூமியை காரிருள் மூடியது (பகலிலேயே).

4. மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுந்து, எருசலேமிற்குள் சுற்றி திரிந்தனர்.

மரித்த இயேசுவின் உடலை மாலை 6 மணிக்குள் அடக்கபண்ண, வேகமாக வேலை செய்தார்கள்.

சனிக்கிழமை ஏப்ரல் 8, சனகெரீத் சங்கத்தினர் பிலாத்துவை வற்புறுத்தி இயேசுவை அடக்கம் செய்த கல்லறையை அரசாங்க காவல் வீரர்களை கொண்டு காவல் காக்க வேண்டியதை செய்தும் முடித்தனர்.

யூத மதத்தலைவர்கள் இயேசு உயிர்த்தெழுவார் என நம்பவில்லை. மாறாக, இயேசுவின் சீடர்கள் சரீரத்தை களவு செய்து விடுவார்கள் என்றும், பிறகு இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்றும் சொல்லக்கூடும் என்பதால் அரசாங்க பாதுகாப்புக் கேட்டார்கள்.

எனவே பிலாத்து, கல்லறையை 3 நாட்கள் காவல் காக்க இராணுவ வீரர்களுக்கு கட்டளையிட்டான்.

ஞாயிறு ஏப்ரல் 9, ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். கிறிஸ்தவ மதவாட்டாரத்திலே "உயிர்த்தெழந்தார்" என்ற பண்டிகை கொண்டாடப்படுகிறது. (புதிய ஏற்பாட்டில் இப்பண்டகை கொண்டாடப்படவில்லை. ஆம் மார்க்கம் வேறு மதம் வேறு). கல்லறையில் இராணுவ வீரர்கள் முத்திரையிட்ட கல்லை வான தூதர்கள் புரட்டிப்போட்டார்கள். இராணுவ வீரர்கள் பயந்து உயிரோடு எழுந்த இயேசுவை கண்களால் கண்டு அவரை குறித்து பயந்து போனார்கள்.

இதை ரோம அதிகாரிகளிடம் போய் சொன்னபோது, அரசு அதிகாரிகள், யூதர்கள், வீரர்களுக்கு கையூட்டு (லஞ்சம்) கொடுத்து, இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அவருடைய சீடர்கள் களவாய் கொண்டு போனதாகவும், நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது இது நடந்தது என்றும் சொன்னார்கள்.

மேலும் இயேசுவின் தாய் மரியாளும், மகதலேனா மரியாளும் மற்றும் சில பெண்களும் அதிகாலை இருட்டோடே இயேசுவை அடக்கம் செய்த கல்லறையினிடம் போனார்கள். அங்கே இவர்கள் எல்லோரும் காலியாக இருந்த கல்லறையை கண்டார்கள்.

இந்த பெண்கள், இயேசுவின் சீடர்களில் இரண்டு பேராகிய பேதுரு மற்றும் யோவானை தேடிப்போய், கல்லறை காலியாக இருப்பதை சொன்னவுடன், இரண்டு பேர்களும் கல்லறையை பார்க்க அவர்களே ஓடிப்போனார்கள்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து அதே நாளில், தான் உயிர்த்தெழந்ததை அநேகர் முன் தோன்றி வெளிப்படுத்தினார்.

மாற் 16:9ன்படி மகதலேனா மரியாளுக்கு முதலில் தரிசனமானார்; இவளிடமிருந்து 7 அசுத்த ஆவிகளை கிறிஸ்து விரட்டி இவளை சுகப்படுத்தியிருந்தார்.

இப்பெண் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களிடம் கூறிய போது அவர்கள், அவளை நம்பவில்லை (மாற்கு 16:10,11).

விசுவாசமுள்ள ஒரு பெண்கள் குழுவும் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்தனர். (மத் 28:9,10). உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்தவை 2 சீடர்கள் கண்டனர் (மாற் 16:12,13), அவர்கள் போய் சொல்லியும் அவர்கள் நம்பவில்லை.

உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவிற்கு தரிசனமானார் (லூக்கா 24:34)

உயிர்த்தெழுந்த இயேசு 10 அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானார் (யோவா 20:13,23)

தோமா அப்பொழுது உடன் இருக்கவில்லை (யோவான் 20:24).

இயேசு கிறிஸ்து தான் உயிரோடு இருக்கின்றார் என்று, தான் உயிர்த்தெழுந்த பின்பு 40 நாட்கள் தரிசனமானார் (அப் 1:3)

ஏப்ரல் 16, இயேசு கிறிஸ்து மரித்த யூதாஸ்காரியோத்தை தவிர, எல்லா அப்போஸ்தலருக்கும் உயிர்த்தெழுந்த தன்னை வெளிப்படுத்தினார் (யோவா 20:26,28).

பிற்பாடு கலிலேயா கடல் அருகே, 7 அப்போஸ்தலர்களுக்கு உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தரிசனமானார் (யோவான் 21:1-3)

பேதுரு திரளாக மீன்களை படித்தபோது, இன்னொரு சம்பவம் நடந்தது.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு பேதுருவை பார்த்து என்னில் அன்பாய் இருக்கின்றாயா? என்று மீண்டும் மீண்டும் கேட்டு, தாழ்மையுடனும் ராஜ விசுவாசத்துடனும் பேதுரு நடந்துக்கொள்ள வேண்டி தேவையை வழியுறுத்தினார்.

(லூக்கா 24, அப் 1) 11 அப்போஸ்தலருக்கும் பரலோகம் போக மேகங்கள் வழியே பரமேறிய போது தன்னை காட்டினார்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலராய் இருக்க ஒருவருக்கு அடிப்படை தகுதி, அவரின் உயிர்த்தெழுதலுக்கு கண்கண்ட சாட்சியாக இருக்க வேண்டும் (அப் 1:21,23)

500க்கும் அதிகமானோர் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை தரிசித்தனர், அல்லது தன்னை அவர் வெளிப்படுத்தினார் (1கொரி 15:6). உயிர்தெழுந்து பரலோகம் போன பிறகும், இயேசு கிறிஸ்து தன்னை சிலருக்கு காட்சியளித்தார். முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானுக்கு தரிசனமானார்; இவர் கல்லால் அடிப்பட்டு மரித்தார் (அப் 7:55,56).

தர்சு பட்டணத்து சவுலுக்கு தரிசனமானார்; தமஸ்கு பட்டணத்திற்கு குதிரையிலே சென்ற போது, இயேசு இவரை சந்தித்தார் (அப் 9:22,26, 1கொரி 15:8).

மரணமும், அடக்கமும், உயிர்த்தெழுதலும் இயேசு கிறிஸ்துவுக்கு நிகழும் என்று தீர்க்கத்தரிசனங்கள் கூறின.

இயேசு கிறிஸ்து மனித உடல் எடுத்து அவதரித்தார். பூவுலகில் வாழ்ந்தார். மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் எதிரிகள் அவரை கல்லறையில் வைத்திருந்தவருக்கு வீணாண முயற்சி செய்து, சாட்சிகளை தயார் செய்தாலும், அவரின் உயிர்த்தெழுதலை மறைக்கவே முடியவில்லை.

பெந்தேகோஸ்தே நாள் முதல், அவர் உயிர்த்தெழுதல் செய்தி பிரசங்கிக்கப்பட்டது (அப் 2:24,31,32, 3:15, 4:10,33, 5:30, 32, 10:40 41, 13:30,34, 17:2,3,31, 26:23)

கிறிஸ்து தான் உயிர்த்தெழுந்தார் என்பதை, நேரில் தரிசனமாகி, ஒரே நாளில் வித்தியாசப்பட்ட நேரங்களிலும், வெவ்வேறு நாட்களில் பல நாட்கள் நடந்தும் பேசியும் சீடர்களுடன் சாப்பிட்டும் உயிர்தெழுதலை உறுதி செய்தார்.

அவரின் மரணத்தைக் குறித்து துக்கப்பட்டு வருத்தமடைந்தவர்களும் பார்வையாளர்களாக இருந்தவர்களும் கூட, அவர் உயிர்த்தெழுந்தார் என்று நம்ப ஆரம்பித்தனர்.

மேலும் கிறிஸ்துவை நம்ப துவங்கினதும், கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையை சொன்னதினால், அதினால் ஏற்பட்ட கடினமான நிலைமைகளினால் அவருக்காய் மரிக்கவும் ஆயத்தமானார்கள்.


ஒருமுறை 500க்கும் அதிகமானோர் அவர் உயிர்த்தெழுதலை கண்டதினால், அவரின் சரீர உயிர்த்தெழுதலுக்கு திருப்திகரமாக சாட்சியாக இருந்தது. எந்த நடுநிலையாளருக்கும், நீதிபதிக்கும் போதுமானதாக இருந்தது.

கிறிஸ்தவத்தை பிரபல்யப்படுத்தும் விருத்தியடையவைக்கும் முயற்சிக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அடித்தளமாக உள்ளது (1 கொரி 15:19).

கிறிஸ்து உயிரோடு எழுந்த நிகழ்ச்சியே இல்லையெனில், கிறிஸ்தவம் வெறுமையும் பயனற்றதுமாய் இருக்கும்.

கிறிஸ்தவத்தின் இருதயமே 1 கொரி15:1,4. அன்றியும் சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே! நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின் படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்த, இயேசு கிறிஸ்து பரம பிதாவினுடைய தெய்வீக குமாரன் ஆவார். உனக்காகவும் எனக்காகவும் மரித்தார்.

நமது பாவங்களிலிருந்து எல்லாம் முழுமையாக மன்னிக்கப்படும்படி அவர் உயிர்த்தெழுந்தார் (1 கொரி 15:17).





யார் ஒருவருமே பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெறவில்லையானால் (ரோ 6:23, 1யோ 1:9, எபி 10:26, அப் 2:38) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அர்த்தமற்றதாகிவிடும். ஏனெனில் திருமுழுக்கு மட்டுமே கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலில் நாம் இணையும் (நிலை) சாயலாகும்.

மேலும் தவறு செய்யும் தேவனுடைய பிள்ளைக்கும், பாவமன்னிப்பின் உறுதி அவரின் உயிர்த்தெழுதலில் உள்ளது.

# தெரிந்து கொள்வோம் !

**Dr. A.P.J. அப்துல் கலாம்**
**1931 - 2015**



15.10.1931 ல் ராமேஸ்வரத்தில் ஜைனுல்லாபுதீன் - ஆஷீயம்மா தம்பதிக்குப் பிறந்தார். 3 சகோதரர்கள், ஒரு சகோதரி.

செய்தித்தாளை வீடுகளில் போட்டு, தன் படிப்புச் செலவுகளை சந்தித்தார்.

ராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் பள்ளியில் ***அய்யாதுரை சாலமன்*** தான், கலாமுக்கு மிகவும் பிடித்த ஆசிரியர். 'ஒருவர் தன் வாழ்வை, தான் விரும்பியபடி அமைத்துக் கொள்ள முடியும் என்பதை அவருடன் பழகியபின் கற்றுக் கொண்டேன்' என்பார் கலாம் .

திருச்சி ***செயின்ட் ஜோசப் கல்லூரியில்*** இளங்கலை இயற்பியல் பட்டமும், சென்னை எம்.ஐ.டியில் விமான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப பொறியியல் பட்டமும் பெற்றார்.

ராக்கெட் தொழில்நுட்பம் பற்றிய ஆறு மாதப் பயிற்சிக்காக அமெரிக்காவின் நாசாவுக்கு சென்று வந்தார்.

1979ல் முதல் முறை எஸ்.எல்.வி. ஏவி தோல்வியடைந்தார்.

1980 ம் ஆண்டு 2வது முறையாக ***எஸ்.எல்.வி*** ஏவி வெற்றி பெற்றார்.

1981ல் ***பத்ம பூஷன்*** 1990ம் ஆண்டு ***பத்ம விபூஷன்,*** மற்றும் 1998ம் ஆண்டு ***பாரத ரத்னா*** விருதுகளை பெற்றார்.

***பிருத்வி, அக்னி*** ஆகிய ஏவுகனைகளை ஏவியதில் முக்கிய பங்காற்றி, இந்தியாவின் மதிப்பை உலகளவில் உயர்த்தினார்.



1998ல் ***பொக்ரான்*** அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்த முக்கிய பங்காற்றினார்

Dr. சோம ராஜீவுடன் சேர்ந்து ***'கரோனரி ஸ்டென்ட்'*** உபகரணத்தை உருவாக்கினார்.




கால் இழந்தவர்களுக்கு எடை குறைந்த செயற்கை மூட்டுகளை தயாரித்து, 4 கிலோ எடையுள்ளதை 400 கிராமாக மாற்றினார்.

2002ல் நாட்டின் 11வது குடியரசு தலைவரானார்



2004ல் சியாச்சின் பனிமுனை சென்றது, 75வது வயதில் நீர்முழ்கிக் கப்பலிலும், ஒலியின் வேகத்தைவிட 2 மடங்கு வேகம் செல்லக்கூடிய சுகோய் 30ல் பயணித்தது அவருடைய தனிச்சிறப்பு.



தன்னுடைய ஓய்வுக்குப் பின்னான காலங்களில் அதிக நேரத்தை, மாணவர்களை சிறப்பாக உருவாக்கவே செலவிட விரும்பினார். கலாமின் எழுச்சி உரைகளும், உத்வேக வார்த்தைகளும் அநேகரை உருவாக்கியுள்ளது.



2015 ஜூலை 27ல், மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் மாணவர்களிடம் உரையாற்றிய போதே மயங்கி விழுந்தவர், பின் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

நம் இந்திய தேசத்தை வளமாக்க இந்த ஒப்பற்ற தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்.

# இயேசுவே உயிர்த்தெழுதலும், ஒளியுமானவர்

## Jesus - The Ressurection & Light

Jerry Bates
(U.S.A)



மனித பலவீனமாகிய மரணத்தை நாம் அனைவரும் சந்தர்ப்பத்தில் அனைவரும் முகமுகமாய் சந்திக்கிறோம்.

வேதாகமத்தின்படி லாசரு உயிருடன் எழுப்பப்பட்டது ஒரு மாதிரியாகும். வேறு சிலரை மரித்தாரியிலிருந்து இயேசுவானவர் உயிருடன் எழுப்பிய இரண்டு சந்தர்ப்பங்களும் உண்டு. (மாற்கு 5:41-42) (லூக்கா 7-12-17)

லாசருவை உயிருடன் எழுப்பியது. அவர் வெற்றிகரமான கடைசியாக எருசலேமுக்குள் சிலுவையில் அறையுப்படும் படி செல்வதற்கு முன் செய்த அற்புதம் இது. இந்த அற்புதம் இயேசுவின் ஊழியத்தில் மிக உச்சகட்டமாக நிகழ்த்தப்பட்ட ஒன்றாக சொல்லப்படுகிறது. இந்த அற்புதம் இயேசுவின் பகைவர்கள் இருந்த இடத்தின் பின்புறத்தில் நடந்தது. இது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

எல்லா அற்புதங்களின் அடிப்படை நோக்கம் மனிதர்களை விசுவாசத்திற்குள் நடத்துவது. (யோவான் 20:30,31)

இந்த அற்புதம் அவர் தன்னை யாரென்று அறிவித்தாரோ அதை உறுதி செய்தது.

நானே ஜீவ அப்பம். பின்பு அவர் 5000ம் பேரை போஷித்தார்.

நானே ஒளி-பின்பு அவர் குருடனுக்கு பார்வையளித்தார்.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனும்-பின்பு அவர் லாசருவை உயிரோடு எழுப்பினார். இவையே அற்புதங்கள் நிகழ்வதற்கான சூழல்.

பெத்தானியாவிலுள்ள ஒரு குடும்பம் இந்த அற்புதத்தில் சம்பந்தப்படுகிறது. (யோ11:1)

எருசலேமுக்கு கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ளது பெத்தானியா.

இயேசுவானவரால் நேசிக்கப்பட்ட ஒரு குடும்பமது. (11:35,36).

லாசருவை இயேசு சிநேகிதனே என்று அழைக்கிறார்.


இந்த சகோதரிகளுக்கு ஒரு பிரச்சனை; அவர்களுடைய ஒரே சகோதரன் லாசரு, மரணத்துக்கேதுவான வியாதியால் பிடிக்கப் பட்டிருந்தான்.

ஒரு முறை வியாதிப்பட்டதினாலேயே இயேசு அவனை நேசிக்கவில்லை என்று அர்த்தமல்ல.

இயேசுவானவர் ஆச்சரியமான தொன்று செய்தார். லாசரு வியாதியாக இருப்பதை அறிந்தும், அவர் தங்கியிருந்த இடத்தில் மேலும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டார்.

கவலையின்மையினால் அல்ல. லாசருவின் சகோதரிகளுக்கு அப்படித் தோன்றினாலும்கூட அவர் மரித்துவிட்டான் என்பதை உறுதி செய்ய அல்ல. அவர் வந்தபின்பு லாசரு மரித்து நான்கு நாளாயிருந்ததை கணக்கிட்டால், அவன் மரிக்கும் முன்பு அவர் அங்கு வருவதற்கு வழியில்லை.

லாசரு மரித்தது உண்மையா என்பதை உறுதி செய்யும் பொருட்டே, இந்த தாமதம் நிகழ்ந்திருக்கிறது என்று தெரிகிறது.



**இயேசுவில் லாசருவின் மரணத்தின் தாக்கம்** (11:33): இது இயேசுவானவரின் உணர்வுகளிலேயே மிகவும் பலமாக சொல்லப்பட்ட ஒன்று.

அவர் ஆவியிலே கலங்கினார். இரண்டு முறை அவர் ஆவியிலே கலங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது, (33,38). இது அவருடைய துக்கத்தையல்ல, கோபத்தையே குறிப்பிடுகிறது. ஏன்?

மறுபடியும் மரிக்கவே லாசரு உயிருடன் எழுந்திருப்பான்.

மரித்தோரை எழுப்பக்கூடிய இயேசுவின் வல்லமையை சந்தேகித்ததால் இருக்கலாம் இந்த கோபம்

மேலும் பாவத்தின் சம்பளம் மரணம் என்ற உண்மையினாலும், மனித வாழ்வில் அதனால் வரும் வேதனையினாலும் இருக்கலாம்.

இயேசுவானவருக்கு மரணம் என்பது வெல்லக் கூடாத ஒன்றல்ல; அது தேவ சித்தமுமல்ல; மாறாக கிறிஸ்து வெல்லும்படியாக வந்த மனிதனின் மிகப் பெரிய பகைவன்.

அவர் அவர்கள் துயரத்தைக் குறித்து அழுதார். (11:35).

லாசருவின் நண்பர்கள் மற்றும் குடும்பத் தாருடையபாடுகளை நினைத்து துக்கப்பட்டார்.

நெருங்கிய நண்பனின் மரணம், மனிதர்களுக்கு உண்டாக்கும் துக்கம், தனக்கும் உண்டென்பதை இயேசுவானவர் பகிர்ந்து கொண்டார்.

இயேசு நம்முடைய பெலவீனங்கள் குறித்து பரிதபிக்கக் கூடியவர் (எபிரெயர் :4:15)

**மக்களிடம் இருந்த விசுவாசம் எப்படிப்பட்டது.**

சீடர்கள், இயேசுவானவரின் பெத்தானிய பயணத்தைக் குறித்து குழப்பமடைந்தார்கள்.

தாமே உயிர்த்தெழுதல் என்று இயேசு சொன்னதை, இந்த உயிர்த்தெழுதல் ஆதரமாக கொண்டு இருந்தது. (11:25,26)

அவருடைய தேவத்துவத்தின் நிரூபனமாக அவருடைய சொந்த உயிர்த்தெழுதலே இருக்கும், (ரோமர் 1:4). அவர் மரித்ததிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டு தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கப்பட்டார்.

தாமே ஜீவன் என்று இயேசு சொன்னதற்கு இந்த அற்புதம் ஆதரவாக இருந்தது; எல்லா உயிருக்கும் அவரே ஆதாரமாக இருக்கிறார். (5:26)

## இம்மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்



**ஆகஸ்ட்**

*15ம்* தேதி – மதுரை, வாடிப்பட்டியில் குடும்ப வேதாகம ஆலோசனை முகாம்

*3ம் வாரம்* – திண்டுக்கல்லில் சுவிசேஷ பயிற்சி வகுப்பு

*4ம் வாரம்* – புதுச்சேரியில் சுவிசேஷ பயிற்சி வகுப்பு.

*29,30ம்* தேதி – பெங்களூர் கூட்டங்கள்

**செப்டம்பர்**

*1ம் வாரம்* – எர்ணாகுளத்தில் சுவிசேஷ பயிற்சி வகுப்பு.

நமது ஆசிரியரின் பிரயாணங்களுக்காக... உடல் ஆரோக்கியத்திற்காக... அந்தந்த பகுதியின் நடைபெறும் வகுப்புகளுக்காக, கூட்டங்களுக்காக... அநேகர் இரட்சிக்கப்பட... தேவைகள் சந்திக்கப்பட...

## பாடம் 1

சிறுவர் பகுதி

# நாயினூர் விதவையின் மகனை இயேசு உயிர்ப்பித்தல்

**(லூக் 7:11–17)**

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளே! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? சந்தாஷமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்! இந்த சந்தோஷத்தோடே நாயினூர் விதவையின் மகனை இயேசு உயிரோடே எழுப்பினதைக் குறித்து நாம் அறிந்துக் கொள்ளலாமா?

ஒரு நாள் இயேசு, நாயின் என்னும் ஊருக்கு போய்கொண்டிருந்தார். இயேசுவின் சீஷரும், அநேக ஜனங்களும் அவருடனே போனார்கள். அவர் அந்த ஊரின் வாசலுக்கு சமிபித்த போது, அந்த ஊரிலே விதவையான ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு ஒரே மகன் மட்டும் தான் இருந்தான். மரித்த அவனை வாசலுக்கு கொண்டு வந்தார்கள். அந்த விதவையும் அந்த ஊர் ஜனங்கள் நிறைய பேரும் அவளுடனே சென்றார்கள்.



அந்த விதவை அம்மாவினுடைய இந்த நிலையை கண்டு, நமது ஆண்டவர் மனதுருகி, அவளை பார்த்து அழாதே என்று சொன்னார். அது மட்டுமா? அந்த பாடை கிட்ட சென்று, அதை தொட்டார். அதை சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது, ஆண்டவர் இயேசு மரித்துபோயிருந்த அந்த அண்ணனை பார்த்து: வாலிபனே, எழுந்திரு என்ற உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

என்ன ஒரு ஆச்சரியம்! உடனே மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புக்கொடுத்தார். அவனை அடக்கம்பண்ண வந்த எல்லாரும் பயமடைந்து மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களை சந்தித்தார் என்றும் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

கடவுளின் செல்லங்களா! இயேசுவின் இரண்டாம் வருகையில் நம்மையும் சந்திப்பார். அப்பொழுது நாம் இந்த பூமியில் வாழும்போது செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்கவைகளை தேவன் தருவார். நல்ல பிள்ளைகளாக கடவுள் விருப்பபடி வாழ்ந்தால், தேவனிடம் நன்மையை பெறலாம். கடவுள் விருப்பபடி இருப்பீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனனவசனம் :** வெளி 22 :12

இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூடவருகிறது.

இப்படிக்கு உங்கள் அண்ணன்
*அன்பு ஏசுதாஸ். எஸ்.*

## பாடம் 2

# லாசருசை உயிரோடு எழுப்புதல்

ஹாய் குட்டீஸ்!எப்படி இருக்கீங்க? எல்லாரும் நல்ல படிக்கிறீங்க தானே? இந்த மாதம், இயேசு உயிரோடு ஒரு அண்ணனை எழுப்பினதை பற்றி தெரிந்துக்கொள்ளலாமா?

இஸ்ரவேல் நாட்டில் பெத்தானியா என்ற ஒரு கிராமத்தில், மார்த்தாள், மரியாள் என்று இரண்டு அக்காக்கள் இருந்தனர். அவர்களுக்கு ஒரே ஒரு சகோதரன் இருந்தாரு; அவர் பேரு லாசரு. இவர்கள் வீட்டுக்கு இயேசு வந்து, தேவனுடைய வார்த்தையெல்லாம் சொன்னார். இவர்களுக்கு இயேசுவை ரொம்ப பிடிக்கும். இயேசுவுக்கும் இவர்களை ரொம்ப பிடிக்கும்.

கொஞ்ச நாள் சென்ற பின்பு, இயேசு வேற ஒரு ஊரில் ஊழியம் செய்துக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் லாசரு மிகவும் வியதிப்பட்டு

மரணத்துக்கு ஏதுவாக இருக்கிறதாக இயேசுவுக்கு தகவல் அனுப்பினார்கள். இயேசு அதை கேட்ட பின்பு தாம் இருந்த ஊரில் மேலும் இரண்டு நாள் தங்கினார்.



இரண்டு நாள் சென்ற பிறகு, இயேசு தம்முடைய சீஷர்களை கூட்டிக்கொண்டு பெத்தானியாவுக்கு போனார். இயேசு அவர்கள் ஊருக்கு வருகிறார் என்று மார்த்தாளும், மரியாளும் கேள்விபட்டு, இயேசுவிடம் சென்று நீர் இங்கே இருந்திருந்தால் எங்கள் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்றார்கள். அவர்கள் இருவரும், அவர்கள் கூட வந்திருந்தவர்களும் அழுகிறதை இயேசு கண்டு, அவரும் கண்ணீர் விட்டார்.

லாசருவை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டு, அவனை வைத்திருந்த கல்லறையின் வாசலிலிருந்த கல்லை எடுத்துப்போட சொன்னார்.

அவன் மரித்து 4 நாட்கள் ஆகிறது. இப்போது நாறுமே என்றனர். ஆயினும் இயேசு சொன்னதை செய்தனர். இயேசு தேவனை நோக்கி ஜெபித்துவிட்டு, "லாசருவே வெளியே வா" என்று சத்தமாய் கூப்பிட்டார். என்ன ஆச்சரியம்? உடனே லாசரு வெளியே வந்தான்.

செல்லங்களா! நம்ம ஆண்டவர் இயேசுவால், மரித்து 4 நாட்களான பிணத்தைக்கூட உயிரோடே கொண்டு வரமுடியும். இதைப் போல நாம் மரித்த பின்னும் கூட, நம்ம ஆண்டவர் மீண்டும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது நம்மையும் உயிரோடே எழுப்பி அவரோடே கூட அழைத்துக்கொண்டு செல்வார்.

**மனன வசனம்:** யோவான் 11:25

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;

*குயினி பிலேமோன்*

## பாடம் 3 தொற்காளை உயிரோடு எழுப்புதல்

ஹலோ குட்டீஸ்! நல்லா இருக்கீங்களா? உங்களுக்காக நாங்கள் ஜெபம் பண்றோம். உங்களுக்காக எதாவது ஜெப குறிப்புகள் இருந்தாலும் எங்களுக்கு எழுதி அனுப்புங்க. **Okay** வா ? சரி, நாம இந்த மாதம் தொற்காள் அக்கா உயிரோடு எழுந்ததை பற்றி படிப்போமா?

யோப்பா என்ற ஊரில் தபீத்தாள் என்ற ஒரு அக்கா இருந்தாங்க. அந்த அக்காவோட மறுபெயர் தொற்காள். அந்த அக்கா அந்த ஊரில மிகவும் நல்ல காரியங்களையும் தர்மங்களையும், செய்துக்கொண்டு வந்தாங்க.

தொற்காள் அக்காவிற்கு உடல் நிலை சரியில்லாமல், இறந்துவிட்டாள். அப்போது பேதுரு, லித்தா என்ற ஊரில் ஊழியம் செய்துக்கொண்டிருந்தார். இந்த ஊர் யோப்பா ஊருக்கு பக்கத்தில் இருந்தது. அதனால யோப்பா பட்டணத்து சீடர்கள் கேள்விப்பட்டு, இரண்டு பேரை அனுப்பி, பேதுருவை யோப்பா பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தனர்.

பேதுரு அந்த அக்காவோட வீட்டுக்கு வந்த பொழுது, அந்த ஊர் விதவைகள் எல்லாரும் அழுது, தொற்காள் தங்களுக்கு கொடுத்த உடைகளை அவருக்கு காண்பித்தார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போக செய்து, முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணி, தொற்காள் அக்காவின், பிரேதத்தை பார்த்து, தபித்தாளே ! எழுந்திரு என்றார்.



என்ன ஆச்சரியம்! அந்த அக்கா உடனே உயிரோடு எழுந்தாங்க. பேதுரு அந்த அக்காவை அவர்களிடத்தில் உயிருள்ளவளாக நிறுத்தினார். இது அந்த ஊர் முழுவதும் தெரிஞ்சு எல்லாரும் கர்த்தரை விசுவாசித்தார்கள்.

பார்த்தீங்களா குட்டீஸ்! நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது, மரித்தவர்கள் அனைவரும் உயிரோடு எழுந்திருப்போம். ஏனென்றால் நம்ம வாழ்க்கை இந்த பூமியேபட முடிந்து போவது அல்ல. மரணத்திற்கு பின்பு தான் நித்தியமான வாழ்க்கை இருக்கு. அதனால இந்த பூமியில் வாழ்கிறப்ப, ஆண்டவருக்க பிரியமாக வாழ்ந்து பரலோத்திற்கு செல்ல, நம்மை நாமே ஆயத்தப்படுத்துவோம்.

**மனனவசனம் :**

யோவான் 5:28,29 "ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m. (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Puthuyugam TV :** Every Tuesday 6:15 a.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio : TV :** Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. Rakshana T.V : Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

P.R. Swamy & Douglas in Tamil on Radio : Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# இம்மாதக் கேள்விகள் ?

1. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழந்தபோது, பரிசுத்த நகரத்தில் காணப்பட்டவர்கள் யார்?
2. சேவர்களுக்கு பணத்தை கொடுத்து, சீடர்கள் இயேசுவின் சரீரத்தை களவாடி விட்டனர் என சொல்ல சொன்னவர்கள் யார்?
3. உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? யார் யாரிடம் சொன்னது?
4. எதினால் கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியாதாயிருந்தது?
5. இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே ....................வருவார்.
6. "அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை" என வாசிப்பதெங்கே?
7. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றவர் யார்?
8. எதை குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்?
9. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்'' அவர் யார்?
10. நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது எது?

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. இயேசு எந்த ஊருக்கு சென்றார்?
2. மரித்த வாலிபனை பார்த்து இயேசு சொன்னது என்ன?
3. உடனே நடந்தது என்ன?
4. லாசரு எந்த கிராமத்தை சேர்த்தவர்?
5. அவனை எத்தனை நாட்கள் கழித்து ஆண்டவர் உயிரோடு எழுப்பினார்?
6. தொற்கள் எப்படிப்பட்ட குணமுடையவள்?
7. மரித்த அனைவரும், இயேசு மீண்டும் வரும்போது என்ன ஆவோம்?

## சென்ற மாத பதில்கள்

1. ஆதி 6 : 22
2. மத் 25 : 21,23, லூக் 16 : 10
3. யோவா 7 : 18
4. வெளி 2 : 10
5. மத் 25 : 21,23
6. யூதா 3
7. லூக் 6 : 38
8. யோவா 15 : 8
9. ஆதி 14 : 20
10. 1 சாமு 15 : 22

### சிறுவர் பகுதி எழுதியவர்கள்

1. V. செரினா - புதுவை
2. G. பிரசன்னா பிரிஸி - வேப்பங்கனேரி
3. P. மாலதி - குறும்பலபேரி
4. A. சிமிர்னா - புதுவை
5. A. அபிஷேக் - புதுவை
6. A. கெனித் சாம் - மதுரை

## சென்ற மாதம் பதில் எழுதியவர்கள்

1. B. ஜாய் ஜோசுவா - தூத்துக்குடி
2. J. ஜோசப் - கோவில்பட்டி
3. Mrs. M. ஈஸ்வரி - கரூர்
4. S.M. தவமணி தேவி - திருப்பூர்
5. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
6. J. ரேச்சல் தமிழரசி - மதுரை
7. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
8. G. சரிதா கோபி - வேப்பங்கனேரி
9. K. மோகன் - குமாரபாளையம்
10. Mrs. கனகமணி ஜேம்சன் - மதுரை
11. Mrs. அமலா ஜெபசிங் - மதுரை
12. M. லாரன்ஸ் கோபி - வேப்பங்கனேரி
13. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
14. P. சூரிய பிரியா - திருமங்கலம்
15. G. சத்யா - மதுரை
16. S. சுவிட்லின் லிடியா - மதுரை
17. M. மெர்ஸி - மதுரை
18. R. ஏஞ்சலின் கமலம் - மதுரை
19. V. ஜெயலட்சுமி - புதுவை
20. A. ஜோஸ்வா - மதுரை
21. S. கார்பஸ் சாலோம் - மதுரை
22. I. ஆண்டனி கிறிஸ்டோபர் - மதுரை
23. G. மனோஜ் பிரபு - மதுரை
24. N. விஜய் - திருமங்கலம்
25. I. ஜான் டேவிட் - மதுரை
26. S. அன்பு ஏசுதாஸ் - மதுரை
27. A. சாமுவேல் - மதுரை
28. P. சௌந்தர் பாண்டி - திருமங்கலம்
29. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
30. G. புஸ்பா ஜேம்ஸ் - விருதுநகர்
31. J. கஸ்தூரி கலாவதி - மதுரை
32. Mrs. குளோரி பால்ராஜ் - தஞ்சை
33. Mrs. பூயிலா ஜேசுராஜன் - புதுவை
34. Mrs. ரூபி ஜெபராஜ் - மதுரை
35. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
36. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
37. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
38. Mrs. கேத்ரின் அருள்நேசம் - மதுரை
39. Mrs.A. அல்பெர்த்தின் - புதுவை
40. M. ஆனந்தராஜ் - புதுவை
41. D. ஜோஸ்பின் மேரி - புதுவை
42. M. அருள் ராஜ் - புதுவை
43. Mrs. புளோரா சுந்தர் - மதுரை
44. A. சந்திரா - மதுரை
45. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
46. Mrs. ஸ்டெல்லா வால்டர் - கோவை
47. Mrs. டெய்ஸி தாமஸ் - படப்பை
48. Mrs. மேரி ராஜ் - மதுரை
49. Mrs. ஹெப்ஸி தாமஸ் - படப்பை
50. C. பூபதி லாரன்ஸ் - கோவை
51. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
52. J. விஜய் - வளர்நகர்
53. G. ஏஞ்சலம்மாள் - வளர்நகர்
54. R. சரோஜா - தென்கலம்
55. Mrs. பிலோமினா பிரபாகரன் - காரைக்கால்
56. Mr. பால் ஜெயராஜ் - சென்னை
57. P. இந்திரா பாண்டி - திருமங்கலம்
58. S. விஜய்சந்திரா - வீரகேரளம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

## இலங்கை ஊழியங்கள்







மாபகலை என்னுமிடத்தில் நமது பைபிள் பாடங்களை முடித்த தமிழர்களுக்கு பைபிள் பரிசாக வழங்கப்பட்டது







ஹாலயில என்னுமிடத்தில் நமது ஆசிரியர் தமிழ் கிறிஸ்தவர்களிடத்தில் செய்தி அளித்த போது ...







டிக்கலோ என்னுமிடத்தில் வீடுகளில் வேத பாடங்கள் நடத்தி பைபிளும் பரிசாக கொடுக்கப்பட்டது.

## திருப்பதியில் பார்வையற்றோர் முகாம்



உணவு நேரம். முகாமில் 90க்கும் மேற்பட்ட பார்வையற்றோர் பங்கு பெற்றனர்







வேத வசனத்தினால் பார்வையற்றோரை ஊக்கப்படுத்திய ஆசிரியர்..





பிரெயில் மாத இதழ், பிரெயில் பைபிள் பாடங்கள் மற்றும் தெலுங்கு MP3 பைபிள் கொடுக்கப்பட்டது.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th August 2015



# கனவு காணுங்கள்!

உறக்கத்தில்
வருவது
கனவல்ல!
உங்களை
உறக்கவிடாமல்
செய்வதே
கனவு!

Dr. A.P.J. அப்துல் கலாம் (1931 – 2015)

If undelivered please return to :
**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To